தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1978 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் முதலமைச்சர் பொப்பிலி இராஜா திரு. ஆர். எஸ். ஆர். ரங்காராவ் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த பொப்பிலி இராஜா திரு. ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் 10-3-1978 ஆம் தேதியன்று மறைந்தது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் துக்கத்தையும் தெரிவிக்கிறது.

அவர் நீதிக் கட்சியின் முக்கியத் தலைவராக இருந்தவர். 1932 ஆம் ஆண்டு, நவம்பர் திங்களிலிருந்து 1936 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் வரையிலும், மீண்டும் 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1937 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் வரையிலும் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்தார்.

அவர் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்தவர். ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக 1931-இல் இருந்து 1936 வரை இருந்தார். 1962-ல் ஆந்திரச் சட்ட மன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தார்.

அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையிலும் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும் உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது).